பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council
187, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
187, ආඩියපාදම් පාර, තිරුනෙල්වෙලි, යාපනය
187, Adiyapatham Road, Thirunelvely, Jaffna
Website: www.np.gov.lk e-mail: chiefsecnpc@gmail.com

எனது இல / මගේ අංකය / My No: NP/09/FRM/2013

திகதி / දිනය / Date: 09.01.2013

மாகாண நிதிச் சுற்றுநிருப இல: PF/02/2013

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

**2013 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின்படி அரசாங்கசேவையிலுள்ள படிகளைத் திருத்துதல்**

பொது நிர்வாக அமைச்சின் 18/2012ம் இலக்கமும் 13.12.2012ம் திகதியும் கொண்ட சுற்றுநிருபத்தின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. மேற்படி சுற்றுநிருபத்தில் குறிப்பிட்ட திகதிகளில் உரிய கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.(சுற்றுநிருபத்தின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.)

3. படிகள் மாற்றியமைப்பதன் மூலம் வழங்கப்படவேண்டிய மேலதிக விசேட படிகள் தங்களின் உரிய கருத்திட்டங்களின் விசேட படிகள் 1003*15 எனும் செலவு விடயத்தின் கீழ் சாட்டுதல் செய்யப்படுதல் வேண்டும்.

4. மேற்படி திருத்தங்களிற்கமைய 2013ம் ஆண்டிற்கான விசேட படிகளிற்கான மேலதிக ஒதுக்கீட்டுத் தேவை மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். மதிப்பீடு செய்யும்போது தற்போது சேவையிலுள்ள ஆளணியினரை மட்டும் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

5. பொது நிர்வாக அமைச்சின் 31/2011ம் இலக்கமும் 12.12.2011ம் திகதியும் கொண்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் 15% விசேடபடிக் கொடுப்பனவுக்கான ஒதுக்கீடுகள் உரிய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் 2013ம் ஆண்டு மதிப்பீடுகளில் 1003*15 எனும் செலவு விடயத்தின் கீழ் ஏற்கெனவே உள்ளடக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேற்கூறப்பட்ட சுற்றுநிருபத்திற்கமைய தங்களது மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ர.விஜயலட்சுமி
பிரதம செயலாளர்
வட மாகாணம்

Chief Secretary
Northern Province

பிரதிகள்:-

1. கௌரவ ஆளுநரின் செயலாளர் - வ.மா
2. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா
3. பணிப்பாளர் - மாகாணக் கணக்காய்வு - வ.மா

} தகவலுக்காக

பிரதம செயலாளர் / ප්‍රධාන ලේකම් / Chief Secretary: Direct - 021 222 0843, Mobile - 077 386 8569, Residence- 021 222 0837
அலுவலகம் / කාර්යාලය / Office: 021 222 0840, 021 320 2285
தொலை நகல் / ෆැක්ස් / Fax: 021 2220841

எனது இலக்கம் EST 5/1/42
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு – 07
2012 திசெம்பர் மாதம் 13 திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்

**2013 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட பிரேரிப்புகளுக்கு அமைவாக அரசாங்க சேவைகளுக்கான படிகளைத் திருத்துதல்**

2013 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட பிரேரிப்புகளின் மூலம் அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட படிகள் பின்வருமாறு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

**02.** **வாழ்க்கைச் செலவுப் படி**

2012.12.31 ஆம் திகதியிடப்பட்டதும் 28/2010 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 2:2 ஆம் 3:2 ஆம் உப பந்திகளுக்கு அமைவாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படி 2013.01.01 ஆம் திகதி தொடக்கம் 6,600/= ரூபாவாகும்.

**03.** **விசேட படி**

**3:1** ஆகக் குறைந்தது 750/= ரூபாவாவாகவும் உச்சமாக 2,500/= ரூபாவாகவும் படிகள் நீங்களாக மாதாந்த திரட்டிய சம்பளத்தின் நூற்றுக்கு ஐந்து வீதமாக (5%) கணக்கிடப்பட்டு 2011.12.12 ஆம் திகதியிடப்பட்டதும் 31/2011 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வூதியத்திற்கு உரித்தற்ற விசேட படியுடன் சேர்த்து பின்வரும் நிரலில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளவாறு வழங்கப்படல் வேண்டும்.

| சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்பச் சம்பளம் | நடைமுறைக்கு வரும் திகதி | அதிகரிக்கும் தொகையிலிரந்து வழங்க வேண்டிய நூற்று வீதம் |
|---|---|---|
| 22,935/= ரூபாவாவிற்கும் குறைவானது | 2013.05.01 | 50% |
| | 2013.09.01 | மீதி 50% |
| 22,935/= ரூபாவும் அதற்கு மேற் பட்டவைகளும் | 2013.07.01 | 50% |
| | 2013.10.01 | மீதி 50% |

3:2 2007.05.11 ஆம் திகதியிடப்பட்டதும் 9/2007 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக மீளப் பணிக்கமர்த்தப்பட்டுள்ள இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் அவர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ள பதவிக்குறிய ஆரம்பச் சம்பளத்திற்கு ஏற்ப மேற்போந்த 3:1ஆம் பந்தியில் குறிப்பிடப் பட்டள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படுகின்ற மாதாந்தப் படிகளை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.

**04. நாட் சம்பளத்தின் மீது சேவையாற்றும் பணியாளர்கள்**

4:1 அமய/ நாட் சம்பள அடிப்படையில் சேவையாற்றும் பணியாளர்களுக்கு 2010.12.31 ஆம் திகதியிடப்பட்டதும் 28/2010 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 5ஆம் பந்தியின் கீழ் வழங்கப்படும் நாளாந்த வாழ்க்கைச் செலவுப்படி 2013.01.01 ஆம் திகதியிலிருந்து 220/= ரூபாவாகும்.

4:2 இந்த பணியாளர்களுக்க மேற்போந்த 3:1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விசேட படி நாளொன்றிற்கு 1/30 என்னும் அடிப்படையில் ஒவ்வொரு மாதத்திலும் கடமையாற்றியுள்ள நாட்களுக்கு கணக்கிடப்பட்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வழங்கப்பட வேண்டும்.

**05. பயிலுநர்கள் மற்றும் பயிற்சி பெறுபவர்கள்**

2006.11.10 ஆம் திகதியிடப்பட்டதும் 06/2006(II) ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 14 ஆம் பந்தியில் உள்வாங்கப்பட்டுள்ள பதவிகளுக்கு மேற்போந்த 3:1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் படிகள் வழங்கப்பட வேண்டும்.

**06. முப்படைகளின் உறுப்பினர்கள்**

முப்படைகளின் உறுப்பினர்களுக்கு இந்த சுற்றறிக்கையின் 02 ஆம் 03 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் படிகள் வழங்கப்பட வேண்டும்.

**07. மாண்புமிகு அமைச்சரகளின் பிரத்தியேகப் பணியாட்டொகுதியினர்**

மாண்புமிகு அமைச்சரகளின், மாண்புமிகு பிரதி அமைச்சரகளின் மற்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரத்தியேகப் பணியாட்டொகுதியினர்களுக்கும் மாகாண சபைகளின் மாண்புமிகு ஆளுநர்களின், மாண்புமிகு முதலமைச்சர்களின் மற்றும் கௌரவ மாகாண சபை உறுப்பினர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரத்தியேகப் பணியாட்டொகுதியினர்களுக்கும் அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சுக்களின் செயலாளர்களினதும் மாகாண பிரதான செயலாளர்களினதும் ஒருங்கினைப்புச் செயலாளர்களுக்கும் மேற்போந்த 02 ஆம் 03 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இயைபுள்ள படிகள் வழங்கப்பட வேண்டும்.

08. ஓய்வூதியம் பெறுவோர்

8:1 **வாழ்க்கைச் செலவுப் படி**

அரசாங்க சேவையைச் சேர்ந்த அனைத்து ஓய்வூதியம் பெறுநர்களுக்குமான மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படி 2013.01.01 ஆம் திகதியிலிருந்து 3,175/= ரூபாவாகும்.

8:2 **ஓய்வூதியத்திற்குச் சேர்க்கப்படும் படிகள்**

8:2:1 2011.12.12 ஆம் திகதியிடப்பட்டதும் 31/2011 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் I ஆம் II ஆம் உப பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள படிகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

(I) 2003.12.31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஓய்வு பெற்ற அரசாங்க பணியாளர்களின் ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்கப்படும் படியானது 2013.01.01 ஆம் திகதியிலிருந்து 2013.06.30 ஆம் திகதி வரை 2,125/= ரூபாவாகவும் 2013.07.01 ஆம் திகதியிலிருந்து 2500/= ரூபாவாகவும் வழங்கப்படல் வேண்டும்

(II) 2004.01.01 ஆம் திகதிக்கும் 2004.11.30 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் ஓய்வு பெற்ற அரசாங்க பணியாளர்களின் ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்கப்படும் படியானது 2013.01.01 ஆம் திகதியிலிருந்து 2013.06.30 ஆம் திகதி வரை 1,125/= ரூபாவாகவும் 2013.07.01 ஆம் திகதியிலிருந்து 1500/= ரூபாவாகவும் வழங்கப்படல் வேண்டும்.

(III) 2004.12.01 ஆம் திகதிக்கும் 2005.12.31 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் ஓய்வு பெற்ற அரசாங்க பணியாளர்களின் ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்கப்படும் படியானது 2013.01.01 ஆம் திகதியிலிருந்து 2013.06.30 ஆம் திகதி வரை 1,000/= ரூபாவாகவும் 2013.07.01 ஆம் திகதியிலிருந்து 1250/= ரூபாவாகவும் வழங்கப்படல் வேண்டும்

09. **மேலதிகக் கொடுப்பனவுகள்**

இந்த அறிவுறுத்தல்கள் தவறாக பொருள் கோடப்பட்டதன் விளைவாக அல்லது ஆவணங்களில் அல்லது கணக்கிடுகையில் அல்லது வேறு தவறொன்றின் காரணமாக எவரேனும் ஆள் ஒருவருக்கு மேலதிக தொகையொன்று வழங்கப்பட்டிருப்பின் அவ்வாறு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ள தொகையை திருப்பிக் கொடுப்பதற்கு குறித்த ஆள் கட்டுப்பட்டுள்ளார். அத்துடன் பிழையான கொடுப்பனவுகளைச் செய்த அவற்றிற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு இயைபுள்ள அதிகார பீடங்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

10. மேலதிக நிதி ஏற்பாடுகளும் கட்டு நிதியும்

இந்த பிரேரிப்புகளை நடைமுறைப்படுத்துவதற்காக 2013 ஆம் ஆண்டில் "பிற படிகள்" (1003) என்பதன் கீழ் ஏற்கனவே குறித்தொதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்படுதல் வேண்டும். மேலதிக நிதி ஏற்பாடுகளிற்கு தேவை ஏழுமாயின் அது 2013 ஆம் ஆண்டின் இறுதிக்காலாண்டில் ஏற்படும் என்பதன் காரணமாக அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் தொடர்பிலான விபரங்கள் தேசிய வரவு செலவுத்திட்டப் பணிப்பாளர் அதிபதியின் ஊடாக ஒரு மாத காலத்திற்கு முன்னதாக பெற்றுக்கொள்ளப்படுவதற்கு பிரதான கணக்காளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

08 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வூதிய அதிகரிப்புகளுக்கு ஏற்புடையதான நிதி ஏற்பாடுகள் ஓய்வூதியத் திணைக்களத்தின் செலவினத் தலைப்புக்களில் ஏற்கனவே உள்ளடக்கப்பட்டுள்ளன.

11. இந்த சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் அனுமதியுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/ பீ. பீ. அபேகோன்
செயலாளர்,
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,